<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : C.C. 926/2025**

**Prosecution witness : அ.சா.2** **Date : 23.02.2026.**

| | |
|---|---|
| **Name : மோகன் குமார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

1) நான் தற்போது ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் புலன் ஆய்வு செய்த புலனாய்வு அதிகாரி திரு.கோபால், காவல் உதவி ஆய்வாளர் தக்க சமயத்தில் சாட்சியம் அளிக்க இயலாத காரணத்தால் அவர் சார்பாக ஆவணத்தின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 21.10.2025 ம் தேதி ஜலகண்டாபுரம் காவல்நிலையத்தில் திரு.கோபால், காவல் உதவி ஆய்வாளர் நிலையப் பொறுப்பில் இருந்த போது, மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு முதல் நிலை காவலர் ராஜேஷ்கண்ணா என்பவரை அனுப்பி அவர் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த மாரிமுத்து என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து திரு.கோபால், காவல் உதவி ஆய்வாளர் ஒப்படைத்ததன் அடிப்படையில் மனு ரசீது எண்.553/2025 என்ற எண்ணில் வழங்கப்பட்டு விசாரணைக்கு பின், புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.298/2025 u/Sec. 296(பி), 115(2), 118(1), 351(3) BNS** ஆக வழக்கு பதிவு செய்தார். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.2** முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 3** ஆகும்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 21/10/2025 ம் தேதி மதியம் 12 மணிக்கு சம்பவ இடம் தேவி பெட்ரோல் பங்க் முன்பு சென்று சாட்சிகள் மாரியப்பன் மற்றும் அஜய் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ 4** மற்றும் **அ.சா.ஆ 5** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் மாரியப்பன், அஜய், மாரிமுத்து, விக்னேஷ், சேகர், மாதையன், மருத்துவர் ராஜேஷ்கண்ணா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காயமடைந்த மாரிமுத்து என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுரேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றார். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6** ஆகும்.

5. இவ்வழக்கின் எதிரி கடந்த 21.10.2025 ம் தேதி கைது செய்யப்பட்டு தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 27.10.2025 ம் தேதி **நி.கு.எண்.298/2025 u/Sec. 296(பி), 115(2), 118(1), 351(3) BNS** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

7. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்குக்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**